**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**CASE NO.SC. 171 /2019**

**Deposition of P.W.** 5

Name : மிக்கேல்ராஜ்

S/o, D/o, W/o : மரிய ஜெபஸ்டின்

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

**Dated: 18.06.2025**

A4 to A6 Present. A1 to A3 absent. Petition filed and allowed.

**முதல் விசாரணை–**

நான் கல்குளம் தாலுகா, வாழ்வச்சகோஷ்டத்தில், கிராம உதவியாளராக பணியாற்றி வருகிறேன். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2வது கையொப்பம் என்னுடையது தான். இந்து, முஸ்லீம் தகராறு காரணமாக காவல்நிலையத்தில் வைத்து விசாரணை நடந்தது. அப்போது நானும், கிராம நிர்வாக அதிகாரியும் கையொப்பம் செய்தோம். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

போலீசார் என்னை விசாரிக்கும் போது என்ன பணிக்காக போனேன் என்று குறிப்பிட்டு கூறவில்லை. நான் கையெழுத்து போட்ட பேப்பரில் என்ன எழுதப்பட்டுள்ளது என்று எனக்குத் தெரியாது. யாரிடமிருந்து வாக்குமூலம் வாங்கினார்கள் என்று எனக்குத் தெரியாது. கிராம நிர்வாக அதிகாரி கையொப்பம் போட சொன்னதால் போட்டேன். வழக்கு சம்பவம் பற்றி எனக்குத் தெரியாது.